

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் “தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்” என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் –2026 விழாவின் சிறப்பு மலரை வெளியிட, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார். உள்பட வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையும் தமிழ் இணையக் கல்விக்கழகமும் இணைந்து வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த இளஞ்சிறார், சிறார், இளையோருக்கு இணையவழியில் நடத்திய பேச்சு, ஒப்புவித்தல், மாறுவேடம், கதை சொல்லுதல் ஆகியப் போட்டிகளில் வெற்றிபெற்ற 15 மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், தா.மோ.அன்பரசன், சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், உள்பட வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.





சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் (11.1.2026) அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் “தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்” என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கத்தினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், உள்பட வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.1.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் “தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்” என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் – 2026 விழாவினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கங்களைப் பார்வையிட்டார்.

## அயலகத் தமிழர் நலத்துறை வாயிலாக பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன!

# அரசு வழங்கிய அயலகத் தமிழர் அடையாள அட்டை ; உங்களுடைய தாய்வீட்டு அடையாளம்!

## சென்னையில் நடைபெற்ற ‘அயலகத் தமிழர் தினம் – 2026’ விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

சென்னை, ஜன. 13–

**சென்னை வர்த்தக மையத்தில், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பை, சாதனைகளைக் கொண்டாடும் வகையில் நடைபெற்ற `அயலகத் தமிழர் தினம் – 2026’ விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து, சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், “அரசின் சார்பாக அயலகத் தமிழர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அடையாள அட்டை என்பது ஒரு மிகச்சிறந்த முன்னுதாரணம். இந்த அடையாள அட்டை என்பது உங்களுடைய தாய்வீட்டு அடையாளம். அந்த வகையில், உங்களின் நலன்களைப் பாதுகாக்கப் பல்வேறு திட்டங்களை அயலகத் தமிழர் நலத்துறை இன்று செயல்படுத்திக்கொண்டிருக்கிறது’’ என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:

பல்வேறு நாடுகளில் இருந்து வந்திருக்கக்கூடிய தமிழ்ச் சொந்தங்களே, பத்திரிகை நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் முதலில் என் காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரையும் எங்கள் தமிழ்நாட்டிற்கு வரவேற்கிறோம். இன்றைக்குத் தமிழ்நாடு அரசு சார்பாக நடக்கின்ற இந்த அயலகத் தமிழர் நாள் விழாவில் கலந்துகொண்டு, உங்களையெல்லாம் சந்திப்பதில் கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன். வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளையும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தமிழர் திருநாள்

எப்போதுமே தூரம் அதிகமாகும் பொழுது உறவும் பாசமும் இன்னும் வலிமையாகும் என்று சொல்வார்கள். அந்த வகையில், இன்று உலகின் பல நாடுகளில் இருந்து வாழ்கின்ற நீங்கள், தமிழ் உணர்வோடு, தமிழ்ப் பற்றோடு, தமிழ்நாட்டின் மீது இருக்கக்கூடிய பாசத்துடன் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வருகை தந்திருக்கிறீர்கள். வெளிநாடுகளில் நீங்கள் பலவிதமான விழாக்களைக் கொண்டாடி இருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள். ஆனால், அவை எதுவுமே நம்முடைய தமிழர் திருநாள் பொங்கலுக்கு ஈடாகாது. ஏனென்றால், பொங்கல் என்பது நம் தமிழ்ப் பண்பாட்டோடு, தமிழ் உணர்வோடு கொண்டாடப்படுகின்ற ஒரு விழா. அப்படிப்பட்ட பொங்கல் பண்டிகை நேரத்தில் அயலகத் தமிழர் உறவுகள் உங்கள் அத்தனை பேரையும் சந்திப்பது, என்னுடைய சொந்தச் சகோதர, சகோதரிகள் மற்றும் என்னுடைய குடும்பத்தினரைச் சந்திக்கின்ற மகிழ்ச்சியை எனக்குத் தருகிறது.

### அயலகத் தமிழர் தினம்

இந்த விழாவை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக்கூடிய அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு என் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அயலகத் தமிழர் தினத்தை நம் திராவிட மாடல் அரசு ஏற்பாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாக நாம் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம். அதில் கடந்த மூன்று வருடங்களாக அவர்கள் தவறாமல் என்னை அழைத்து விடுவார்கள், நானும் தவறாமல் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு ஆண்டும் ஒரு தலைப்பைத் தேர்வு செய்து, அந்தத் தலைப்பின் கீழ் நிகழ்ச்சிகளை நடத்தி இந்த தினத்தை நீங்கள் கொண்டாடி வருகிறீர்கள். இந்த ஆண்டுக்கான தலைப்பு `தமிழால் இணைவோம் தரணியில் உயர்வோம்’ என்கின்ற ஒரு மிகச்சிறப்பான தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது, அதற்கு என்னுடைய வாழ்த்துகள். ஏனென்றால், தமிழ் மொழி என்பது நாம் அனைவரையும் இணைக்கக்கூடிய ஒரு மொழி. தமிழ் யாரையும் வேறுபடுத்தாது, பிரித்துப் பார்க்காது. யாருக்கும் எந்தப் பேதத்தையும் காட்டாத மொழிதான் நம் தாய்மொழியான தமிழ்மொழி.

### தாய்மொழி தமிழ்மொழி

தமிழ் என்ற அடையாளத்திற்கு முன்னால் வேறு எந்த அடையாளமும் நிற்க முடியாது, போட்டி போட முடியாது. சாதி, மதம், பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, ஆண், பெண் என்று எல்லா பேதங்களையும் தாண்டி நம் அனைவரையும் இணைத்திருப்பது நம்முடைய தாய்மொழி தமிழ்மொழி. அப்படி நாம் அனைவரும் தமிழால் இணைந்ததால்தான் இன்று தரணியை வென்றுகொண்டிருக்கிறோம்.

> **“வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாத்து அரவணைக்கும் – முதல்வர் தலைமையிலான “திராவிட மாடல்” அரசின் முன்னெடுப்புகள் மென்மேலும் தொடரும்!”**

ஒன்றாக இணையாத எந்த இனமும் உலகில் உயர்ந்த வரலாறே கிடையாது. அந்த வகையில், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களை ஒருங்கிணைக்கக்கூடிய பணி என்பது மிக மிக முக்கியமானது; இந்த நேரத்தில் மிக மிக அவசியமானது. அதைவிட முக்கியம், அவர்களின் நலன்களைப் பாதுகாக்கின்ற பணி. முன்பெல்லாம் தமிழ்நாட்டிலிருந்து வேலைக்காகவும், எளிய பணிகளைச் செய்வதற்காகவும் தான் நிறைய பேர் வெளிநாட்டிற்குச் செல்வார்கள், வெளிநாட்டில் குடியேறுவார்கள். ஆனால் இன்று, தமிழ்நாட்டிலிருந்து பொறியாளர்களாக, மருத்துவர்களாக, ஆராய்ச்சியாளர்களாகப் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறீர்கள்; அங்கே குடியேறியிருக்கிறீர்கள்.

### நம் திராவிட மாடல்

தொழிலாளர்களாகச் சென்ற காலத்தில் குடும்பத்தை இங்கே விட்டுவிட்டுத் தனியாகச் சென்று அங்கே இருப்பீர்கள். இப்போது குடும்பத்தையே அழைத்துச் சென்று அங்கேயே தங்கும் அளவிற்குப் பெரிய பணிகளில், இன்று அங்கே சென்று நிலைபெற்றிருக்கிறீர்கள். இந்த வளர்ச்சி என்பது தானாக நடந்த ஒன்றல்ல; இந்த முன்னேற்றத்திற்குப் பெயர்தான் நம் திராவிட மாடல்.



இப்படி குடும்பத்தோடு வெளிநாட்டில் வசிக்கும்போதுதான் தமிழ்நாட்டிலிருந்து இன்னும் அதிகமான எதிர்பார்ப்புகள் நமக்குள்ளே உருவாகும். அதை உணர்ந்துதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர் நலவாரியத்தை முதன்முதலாகத் தொடங்கி வைத்தார்கள். இதில் இன்று சுமார் 32,000 பேர் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். இதன் மூலம் அயலகத் தமிழர்களுக்குப் பல்வேறு முன்னெடுப்புகளை நம்முடைய திராவிட மாடல் அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்.

### தாய்வீட்டு அடையாளம்

இந்த வாரியம் உங்களுக்குப் பல உதவிகள் செய்தாலும், அரசின் சார்பாக அயலகத் தமிழர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அடையாள அட்டை என்பது ஒரு மிகச்சிறந்த முன்னுதாரணம். இந்த அடையாள அட்டை என்பது உங்களுடைய தாய்வீட்டு அடையாளம். அந்த வகையில், உங்களின் நலன்களைப் பாதுகாக்கப் பல்வேறு திட்டங்களை அயலகத் தமிழர் நலத்துறை இன்று செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

உக்ரைன், ஈரான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் போர் நடந்தபோது அங்கிருந்த தமிழர்களை எல்லாம் பாதுகாப்பாக நம் துறைதான் மீட்டுக் கொண்டு வந்தது. அதுமட்டுமல்ல, வெளிநாடுகளில் வேலை செய்கின்ற தமிழர்களுக்கு ஏதாவது ஒரு பிரச்சினை அல்லது சிக்கல் என்றால், அதற்குத் தீர்வுகாண எல்லா உதவிகளையும் இந்தத் துறை உடனடியாகச் செய்து கொடுத்திருக்கிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம், அங்கே இருக்கக்கூடிய அயலகத் தமிழர்களாகிய உங்களைத் தொடர்ந்து சந்தித்து வருகிறார்கள். அப்படிச் சந்திக்கும்போது நம் முதலமைச்சர் உங்களுக்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கிறார்.

### இந்தியாவிலேயே ‘நம்பர் ஒன்’

வெளிநாடுகளில் பல உயரங்களை அடைந்திருக்கக்கூடிய தமிழர்கள் நீங்கள், தமிழ்நாட்டில் தொழில் தொடங்குகின்ற வகையில், முதலீடு செய்ய வேண்டும், அந்த முயற்சியை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று இந்த வேண்டுகோளை நம்முடைய முதலமைச்சர் தொடர்ந்து உங்களிடத்தில் வைக்கிறார். இன்று முதலமைச்சர் வைத்த வேண்டுகோளின் தொடர்ச்சியாகவும், உங்களின் முயற்சியின் தொடர்ச்சியாகவும் இன்று இந்தியாவிலேயே ‘நம்பர் ஒன்’ பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக, நம் தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது. அந்தச் சாதனையில் உங்களின் பங்கு மிகப் பெரியது. நாம் அனைவரும் சேர்ந்து இந்த வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். பொருளாதாரத்தில் நாம் வளரும் அதே நேரத்தில் நம் மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மறந்துவிடக் கூடாது. உங்களின் குழந்தைகளுக்கு, அடுத்த தலைமுறைக்குத் தமிழ்நாட்டின் அடையாளத்தைச் சொல்லித் தருவது மிக மிக முக்கியம். அதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் `வேர்களைத் தேடி’ என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். ஆண்டுதோறும் வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்களின் அடுத்த தலைமுறைப் பிள்ளைகளைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து, நம்முடைய பண்பாட்டுச் சின்னங்களை, அடையாளங்களை எல்லாம் அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

> **“தமிழால் இணைவோம்! தரணியில் உயர்வோம்!”**

> **“பல நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் அனைவரையும் உணர்வால் பிணைக்கும் தமிழ்மொழியின் சிறப்பையும், தமிழ்நாட்டு வரலாற்றையும் இளம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லி வளர்த்திடுவீர்!”**

### பண்பாட்டுச் சின்னங்கள்

நமது ஊரில் இருக்கக்கூடிய பண்பாட்டுச் சின்னங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை எல்லாம் அவர்கள் நேரடியாகப் பார்க்கும்போது அவர்களுக்கு ஒரு புரிதலும் பரவசமும் ஏற்படும். இந்த உலகத்தில் நமக்கென்று இருக்கின்ற இடம் தமிழ்நாடு என்ற அந்த நம்பிக்கை அடுத்த தலைமுறைக்கு, உங்களின் குழந்தைகளுக்கு நிச்சயம் ஏற்படும். இப்பொழுது நம் அரசின் சார்பாக, `உங்கள் கனவைச் சொல்லுங்கள்’ என்ற ஒரு திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அரசின் திட்டங்கள் பற்றியும், பயன்கள் பற்றியும், எதிர்காலத்தில் எத்தகைய திட்டங்கள் வரவேண்டும் என்ற மக்களின் கனவுகளைக் கேட்டறிகின்ற முயற்சிதான் இந்தத் திட்டம்.

அதேபோல, அயலகத் தமிழர்களும் உங்களின் கனவுகளை, இந்த வாரியத்தின் பொறுப்பாளர்களிடம், அமைச்சர் அண்ணன் நாசர் அவர்களிடம் தெரியப்படுத்துங்கள். உங்களுடைய தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஏற்ற திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் தீட்டிக்கொடுப்பார்கள்.

உங்கள் அனைவரையும் சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறைவையும் எனக்குத் தந்திருக்கிறது. உங்களின் அடுத்தடுத்த பணிகள் மேன்மேலும் சிறக்கட்டும். தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம். இங்கே வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சி மிகச்சிறந்த வெற்றியைத் தரும் என்ற நம்பிக்கையுடன், உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ஆவடி நாசர், தா.மோ.அன்பரசன், கனடா நாடாளுமன்ற உறுப்பினர் சுவனிதா நாதன், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன், மலேசிய முன்னாள் அமைச்சர் கமலாநாதன், இலங்கை மாகாணங்களின் முன்னாள் ஆளுநர்கள் செந்தில் தொண்டைமான், ஜீவன் தியாகராஜ், சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தினகரன், டர்பன் நகர முன்னாள் மேயர் லோகநாதன், அருண் சீனிவாசன், விமலா ஜென்னிங்ஸ், ராஜன் நடராஜன், திட்டக்குழு துணைத்தலைவர் ஜெயரஞ்சன், வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாதிபதி, சட்டமன்ற உறுப்பினர் ஜவாஹிருல்லா, அரசு முதன்மைச் செயலாளர் ரீட்டா ஹரிஷ் தாக்கூர் ஐ.ஏ.எஸ்., ஆணையர் முனைவர் வள்ளலார் ஐ.ஏ.எஸ்., முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி பாலகிருஷ்ணன், அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்கள் வழக்கறிஞர் புகழ்காந்தி, துபாய் மீரான், மும்பை மீரான், கால்டுவெல் வேல்நம்பி, முகமது பைசல், ஆறுமுகம் பரசுராமன், சிங்கப்பூர் ராம், நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, சல்மா, அப்துல்லா, கவிஞர் சினேகன், கழக அயலக அணி நிர்வாகிகள் பரிதி இளம்சுருதி, விஜயன் ராமகிருஷ்ணன், உமாராணி, கன்னிகை ஸ்டாலின், ஆண்டாள் பிரியதர்ஷினி உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.